

பலாலி கிழக்கு அம்மன் தேவஸ்தானத்தைச் சேர்ந்த

அமரர்

## பிரம்மஸ்ரீ கனகசபாபதிஐயர் சதாசிவஐயர்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த நினைவுமலர்

# சதாஞ்சலி

31.12.2008

உ

சிவசக்தி



பலாலி கிழக்கு, அம்மன்

தேவஸ்தானத்தைச் சேர்ந்த

**அமரர்**

**பிரம்*மஸ்ரீ கனகசபாபதிஐயர்* சதாசிவஐயர்***

அவர்களின் சிவபதப்பேறு குறித்த நினைவுமலர்

# சதாஞ்சலி

**31.12.2008**

உ

சிவசக்தி

# சமர்ப்பணம்

அறிவுடன் பண்பையும் ஊட்டி

சமூகத்தில் சிறப்புற வாழ

நல் வழிகாட்டி நெறிப்படுத்தி

அந்நெறியில் நாம் வாழ்வதை

கண்டு களிப்புற்று இறும்பூவெய்தி

சதாசிவன் மலரடி சேர்ந்த

எங்கள் அன்புத் தெய்வம்

பிரம்மஸ்ரீ க.சதாசிவஐயர் அவர்களுக்கு

இந்நினைவு மலரினைக்

காணிக்கையாக்குகின்றோம்.

குடும்பத்தினர்




உ

சிவமயம்

மலர்வு 19 – 11 – 1927

உதிர்வு 21 – 12 – 2008



அமரர்

# பிரம்மஸ்ரீ கனகசபாபதிஐயர் சதாசிவஐயர்

## திதி வெண்பா

நற் சர்வதாரி ஆண்டு மார்கழித் திங்கள்
அபர பஷ தசமி தன்னில்
உத்தமப் பண்பாளர் சதாசிவஐயர்
சதாசிவன் மலரடி சேர்ந்தாரே.



# பஞ்சபுராணத்திரட்டு

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் காப்பு

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் - கோலம் செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா.

## தேவாரம்

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

பண் : கொல்லி 3ம் திருமுறை

மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல் லகதிக்கு யாதுமோர் குறைவிலை
கண்ணின்நல் ல..துறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

## திருவாசகம்

### மணிவாசகப்பெருமான்

8ம் திருமுறை

பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

### கருவூரத்தேவர்

பண் : காந்தாரம் 9ம் திருமுறை

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.

## திருப்பல்லாண்டு

### சேந்தனார்

பண் : பஞ்சமம் 9ம் திருமுறை

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள்
செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே..

## பெரியபுராணம்

### சேந்தனார்

பண் : பஞ்சமம் 9ம் திருமுறை

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள்
செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே..



## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தன மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணாநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞாசத் திருபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



## எங்கள் அன்புத் தெய்வம்
## பிரம்மஸ்ரீ கனகசபாபதிஐயர் சதாசிவஐயர் அவர்களின்
## வாழ்க்கைப் பாதையில் பின்னோக்கி
## ஒரு சில நிமிடங்கள் ...

திருமூலரால் சிவத்திருநாடு என்று வர்ணிக்கப்பட்ட இலங்கைத் திருநாட்டின் வடக்கே யாழ்ப்பாண மாவட்டத்தில் முக்கியத்துவம் வாய்ந்த பலாலி எனும் கிராமத்தில் பலாலி கிழக்கு அம்மன் தேவஸ்தானத்தைச் சேர்ந்த சுப்பிரமணியக்குருக்கள் கனகசபாபதிஐயர், சதாசிவஐயர் அன்னம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனாக 1927வது வருடம் கார்த்திகை மாதம் 19ம் நாள் அமரர் கனகசபாபதிஐயர் சதாசிவஐயர் அவர்கள் பிறந்தார்.

ஐயா அவர்கள் தமது ஆரம்பக்கல்வியை இடைக்காடு மகாவித்தியாலயத்திலும் மேற்படிப்பினை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலும் கற்று சிரேஷ்ட பாடசாலைப் பத்திரப் பரீட்சையில் தோற்றி சித்தியும் அடைந்த நிலையில் அவர்தம் தந்தையார் சுப்பிரமணியக்குருக்கள் கனகசபாபதிஐயர் அவர்கள் காச நோயினால் பீடிக்கப்பட்டு சிவபதப் பேறடைய கைம்பெண்ணான தாயாரையும் மூன்று சகோதரிகளையும் நான்கு சகோதரர்களையும் கட்டிக்காத்து வளர்த்தெடுக்கும் பெரும் பொறுப்பினை மனமுவந்து ஏற்றுக் கொண்டு அதன் படியே சகோதரர்களையும் சகோதரிகளையும் சிறப்புற வாழ வழிசெய்தார்.

ஐயா அவர்கள் தமது பதினாறாவது வயதிலே பிரித்தானிய விமானப்படையின் மயிலிட்டிப் பகுதியில் அமைந்திருந்த கண்காணிப்பகத்தில் ஒன்பது ஆண்டுகள் சேவையாற்றினார்.



1951ம் ஆண்டு சுதந்திர இலங்கையின் காணி அமைச்சில் தமது அரச பணியினைத் தொடர்ந்த பிரம்மஸ்ரீ கனகசபாபதிஐயர் சதாசிவஐயர் அவர்கள் 1961ம் ஆண்டு யாழ்ப்பாணக் கச்சேரிக்கு இடமாற்றலானார். மீள 1965 முதல் 1983 இல் அன்னார் இளைப்பாறும் வரை கொழும்பு கட்டடத் திணைக்களத்தில் சிரேஷ்ட தட்டெழுத்தாளராகப் பணியாற்றினார்.

இவ்வாறு வாழுங்காலத்தில் 1958ம் ஆண்டு கீரிமலை நகுலேஸ்வர ஆதீனத்தைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ சபாரத்தினக்குருக்கள் கோமதியம்மா தம்பதியினரின் புதல்வியாகிய இராசம்மாவை கரம்பற்றி இல்லறம் எனும் நல்லறவாழ்வினை ஆரம்பித்தார். இல்லறவாழ்வின் பெரும் பயனாக மூன்று நன்மக்களைப் பெற்று தக்க காலத்தில் அவர்களுக்கு அறிவூட்டி பண்பும் பாசமும் மிக்கவர்களாக அவர்களை வளர்த்ததோடல்லாமல் தக்க வாழ்க்கைத் துணைகளைத் தேடிக்கொடுத்து ஐந்து பேரப்பிள்ளைகளையும் சீராட்டி மகிழ்ந்து வருங்காலத்தில் தனது மூத்த பேர்த்தியின் திருமணம் சீரும் சிறப்புமாக நடந்தேறியதைக் கண்டு களிக்கும் வாய்ப்பினையும் எம்பெருமான் அன்னாருக்கு வழங்கியிருந்தார்.

இவ்வாறாக சிறந்ததொரு வாழ்க்கையை வாழ்ந்த பிரம்மஸ்ரீ கனகசபாபதிஐயர் சதாசிவஐயர் அவர்கள் தமது 81ஆவது அகவையைப் பூர்த்தி செய்த ஒரு சில வாரங்களுக்குள் நோய்வாய்ப்பட்டு 2008வது வருடம் மார்கழி மாதம் 21ம் நாள் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் சதாசிவன் மலரடி சேர்ந்தார்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

# எங்கள் அன்புத் தெய்வத்தின் குறிப்பேடுகளில் இருந்து ...

- செல்வம் என்பது மன நிறைவு.
- வாழ்வின் நோக்கம் - அழிகின்ற உடம்பிலிருந்து அழியாத ஆத்மாதனை உணர்வதே ஆகும்.
- இறைவனது பாதம் பணிவதனால் நித்தமும் மக்களை வருத்தும் காமம், குரோதம், லோபம் முதலிய பிணிகள் நீங்கும். அதன் பயனாக பாவங்கள் செய்யாது ஒழிவர். அதன் பயனாக மரணபயம் முதலிய எல்லா அச்சங்களும் நீங்கும். மெய்யன்பு தலையெடுக்கும்.
- தன்னை ஒருமுகமான மனதோடு எந்நாளும் வழிபடும் அடியார்கள் குறைவில்லாத சிவபதத்தை அடைய அருள் செய்யும் பெருங்குணமுடையவர் இறைவன்.
- நீயே தாயும் தந்தையும், நீயே உறவும் தோழனும் நீயே வித்தையும் செல்வமும், எனது தேவதேவனே நீயே எல்லாம் - ஓம் நமசிவாய.
- காமம், பொருளாசை இரண்டையும் ஒழித்தாலன்றி மனதை ஒருவழிப்படுத்த இயலாது.
- பலமே வாழ்வு, பலவீனமே மரணம். மனிதன் தன்னிடத்தில் முழுமையான நம்பிக்கை வைக்க வேண்டும்.
- வாழ்வின் முழு இரகசியம் அச்சமின்றி இருப்பதே
- உனக்கு என்ன நேரும் என்பது பற்றி அஞ்சாதே.
- சொல்லிருந்து உணர்ச்சிகளை அறியலாம் உணர்ச்சியிலிருந்து செயலை அறியலாம் செயலிலிருந்து திறமையை அறியலாம்.
- தேகம் -- ஓர் அகல் விளக்கு
  உணர்வு -- நெய்



  ஆத்மா -- திரி
  பரமாத்மா -- ஒளி
- வெற்றியடைவதற்கு ...
  அன்பான அணுகுமுறை
  அயராத உழைப்பு
  அனைவரும் வேண்டும் என்ற உணர்வு
  எளிதில் கவலைப்படாத உள்ளம்
  எதற்கும் அஞ்சாத நெஞ்சம்
  எந்த நிலையிலும் நேர்மை
  எவரையும் புண்படுத்தாத உள்ளம்
  ஒப்பற்ற ஒழுக்கம்
  குன்றாத உற்சாகம்
  மாறாத விசுவாசம்
- வறுமை, செல்வம், பொல்லாத கோபம், அதீத மகிழ்ச்சி, வெறுப்பு இவை ஐந்தும் ஆறு போல் ஓடி உலகை அரித்து தின்று விடக்கூடியவை.
- வினைப்பயனை அனுபவிப்பதற்கே உடல் வேண்டும்.
- இறைவனைக் காட்டிலும் இறைவனுடைய நாமத்திற்கு மகிமை அதிகம்.
- பற்றில்லாதவனாகிய கடவுளுடைய பற்றை மட்டும் பற்றிக் கொள்ள வேண்டும். உள்ள பற்றுக்களை விட்டொழிப்பதற்காகவே அப்பற்றினைப் பற்ற வேண்டும்.
- நாயகி தன்னைப் பிரிந்த காதலன் மீது மனதை ஆவலோடு செலுத்தி தியானிக்கின்றாள். இத்தகைய இடைவிடாத தியானமே உபாசனை ஆகும்.
- இறைவன் மீது அன்பு பெருகி அதனால் மனங்கசிந்து கண்ணீர் பெருக அவனை இடையறாது நினைத்துக் கொண்டிருந்தலும் அவனை தனக்கு உயிராக கருதுதலும்

அக்காரணத்தால் இறைவனுக்குப் பிரியமாகத் தன்னை ஆக்கி இறைவனது அருளைப் பெறுதலுமே பக்தியாகும்.

- எனக்கு வேறு பற்றொன்றும் இல்லாமையின் உம் திருவடிகளையே என் மனத்துள் எப்போதும் தியானிக்கின்றேன். அத்தன்மையை உமது அருளால் பெற்ற போதே பக்தி செய்யப் பிறந்தவன் ஆனேன். இனிப்பிறக்காத தன்மையும் கைகூடப் பெற்றேன். அறிந்தவர் எப்போதும் வணங்கித் துதிக்கும் பெருமையை உடைய உயிர்களின் நன்மையை நாடுபவரே உம்மை நான் மறந்தாலும் நமச்சிவாய எனும் உமது ஐந்தெழுத்தை எந்நாக்கு எப்போதும் மறவாமல் சொல்லும்.
- தூய அறிவாக விளங்கும் இறைவனுடைய நல்ல திருவடிகளைத் தொழாமல் இருப்பாரானால் அவர் கற்ற கல்வியினால் ஆகிய பயன் என்ன?
- வெட்கத்தை விட்டு பகவானது நாமத்தைச் சொல்லும் போதும் குணங்களைப் பாடும் போதும் பக்தி உள்ளத்துள் பொங்கி உடல் நடுக்கம், மயிர்க்கூச்செறிதல், ஆனந்தக் கண்ணீர் பெருகுதல் முதலியவை உண்டாகின்றன.
- கீர்த்தனம் நடக்கும் போது தெய்வமும் பக்தனும் நாமமும் ஒன்று கூடுவதனால் அதனை திரிவேணி சங்கமம் என்பர்.
- சித்தியும் பக்தியும் முக்தியும் கைகூடும் குருவின் கிருபை இன்றி எவருக்கும் மோட்சமில்லை.
- தாழ்மை என்பது பெறற்கரிய பெருங்குணம். பணிவுடைமை விலையுயர்ந்த ஓர் அணியாகும்.
- மனிதனது மனம் முறையாகப் பண்படுத்தப்படின் அதனால் செய்வதற்கு அரியது யாதொன்றும் இல்லை.
- தாழ்மையாக இரு, பொறுமையாக இரு,
  உனக்கு மரியாதையை எண்ணாதே,
  அனைவருக்கும் மரியாதையைக் காட்டு.



- திறமையாகக் கருமம் செய்வதற்கும் அன்பு செய்வதற்கும் அறிவதற்கும் மனம் ஒருமைப்பட வேண்டும்.
- ஆசைகள் வளர வளரத் தேவைகளும் வளர்ந்து கொண்டே போகும்.
- வாக்கு வாளை விட வலிமையானது.
- அசூயை, ஆத்திரம், காதல் ஆகியவற்றில் ஈடுபடுபவர்கள் சுற்றுச் சூழலை மறந்து விடுகின்றார்கள்.
- இறையுணர்வுடைய ஆணும் இல்லறம் பேணும் பெண்ணும் துய்க்கும் போகம் இறைவனை உணரும் யோகம் அங்கு மோகம் கூட ஒரு வகை யாகம்.
- அர்ச்சனைகளால் சாமிக்குப் பெருமை
  பிரச்சனைகளால் ஆசாமிக்குப் பெருமை
- ந -- மலநீக்கம்
  ம -- மலம்
  சி -- சிவம்
  வா -- சக்தி - வர்த்தனி - சிவவர்த்தனி
  ய -- ஆன்மா
- ப -- பாவம்
  ர -- ராகம்
  த -- தாள
  ம் -- ம்
- பேசாப் பொருளைப் பேச நான் துணிந்தேன். கேட்கா வரத்தைக் கேட்க நான் துணிந்தேன். மண் மீதுள்ள மக்கள், பறவைகள், விலங்குகள், பூச்சிகள், புல் பூண்டு, மரங்கள் யாவுமென் வினையால் இடும்பைத் தீர்ந்தே இன்பமுற்று அன்புடன் இணைய வாழ்த்திடவே செய்தல் வேண்டும் தேவதேவா! ஞானகாசத்து நடுவே நின்று நான் பூமண்டலத்தில் அன்பும் பொறையும் விளங்கத் துன்பமும் மிடிமையும் நோவும் தூவும் நீங்கிச் சார்ந்த மன்னுயிரேல்லாம் இன்புற்று வாழ்க என்பேன்! இதனை நீ திருச்செவி கொண்டு

திருவுளம் இரங்கி, அங்ஙனமே ஆகுக! என்பாய் ஐயனே!
இந்நாள், இப்பொழுது எனக்கிவ் வரத்தினை அருள்வாய்,
ஆதி மூலமே! அநந்த சக்திகுமாரனே! சந்திரமவுலீ!
நித்தியப்பொருளே! சரணம்! சரணம்! சரணம்!

-- பாரதி

- கடமையைச் செய்யாது உரிமையைக் கோருவது கலகம், உரிமையின்றிக் கடமையைச் செய்வது அடிமைத்தனம்
- ஆண்டவன் நமக்கு நீண்ட ஆயுளைக் கொடுத்து இருக்கின்றான். ஆனால் நாமே அதனை குறுகியதாக ஆக்கிக் கொள்கின்றொம்.
- ஆரோக்கியமே ஒருவனது முதற் சொத்தாகும்.
- சிறந்த செயல் வீரனாக ஆவதற்கு ...
  - கொழுந்து விட்டெரியும் ஆசையும் கொதிக்கும் மனோ நிலையும் உடையவனாக இரு.
  - யுக்தியுடன் காரியத்தைச் செய்
  - தனித்தன்மையடன் செயலாற்ற
  - செய்வன திருந்தச் செய்
  - ஒழுங்கடன் வேலை செய்
  - நேரத்தை வீணாக்காதே
- விட்டுக் கொடுத்தவன் கெட்டுப் போவதில்லை.
- அச்சம், துயர் இரண்டும் அறவே அகற்றப்படல் வேண்டும்
- முகத்தில் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள் அகத்தில் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்.
- தீர்க்க ஆலோசனை செய்து உண்மைப் பொருளைக் காண்பவர் ரிஷி எனப்படுவர். மனதினால் ஆலோசனை செய்து தம்முள் மெய்ப்பொருளை உணர்பவர் முனிவர் ஆவர்.
- இயற்கையில் நிகழும் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் பிரித்தறிந்து விடை காணுவதில் ஒரு சிலர் ஒருமுகமாகத் தங்களை அர்ப்பணித்துக் கொள்கின்றார்கள்.



- Get what you want in life
  Enjoy what you get in life.
- Wide will wear, while
  Narrow will tear.
- No matter what happens,
  Always be yourself.
- An average man develops only ten percent of his talent - mental abilities.
- Our life is what our thoughts make it.
- Our mental attitude has an almost unbelievable effect on our physical powers.
- Three best doctors in the world are -
  Dr. Diet
  Dr. Quiet
  Dr. Happiness
- For Good Health
  Learn to sleep well
  Love good music
  See the funny side of life
- Order is Heaven's first law.

## திருப்பொற்சுண்ணம்

முத்துநற்றாமம் பூமாலை தூக்கி
முளைக்குடம் தூபம் நற்றீபம் வைமின்
சக்தியும் சோமியும் பார்மகளு
நாமகளோடு பல்லாண் டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்பதியுங்
கங்கையும் வந்து கவரி கொள்மின்
அத்தன் ஐயாறன் அம்மானைப் பாடி
ஆடப் பொற்சுண்ண மிடித்து நாமே. 1

பூவியல் வார்சடை யெம்பிரார்க்கு
பொற்றிருச் சுண்ண மிடிக்க வேண்டும்
மாவின் வடுகின்ன ரண்ண கண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நிலாமே
குனிமின் றொழுமி னெங்கோ னெங்கூத்தன்
தேவியுந் தானும் வந்தெம்மை யாளச்
செம்பொன்செய் சுண்ண மிடித்து நாமே. 2

சுந்தர நீறணிந்தும் மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டி யெங்கு
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோனயன் றன்பெருமான்
ஆழியான் நாதன் நல்வேலன் தாதை
எந்தரம் ஆளுமையாள் கொழுநற்
கேய்ந்த பொற்சுண்ண மிடித்து நாமே. 3

காசணி மின்க ளுலக்கை யெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேசமுடன் அடிய வர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தி



தேசமெல் லாம்புகழந் தாடுங்கச்சித்
திருவேகம்பன் செம்பொற் கோவில் பாடி
பாச வினையைப் பறித்து நின்று
பாடிப்பொற் சுண்ண மிடித்து நாமே. 4

அறுகெடுப் பாரய னும்மரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்க ளெல்லாம்
நம்மிற் பின்பல்ல தெடுக்க வொட்டோம்
சிறிவுடை மும்மதில் எய்த வில்லி
திருவே கம்பன் செம்பொற் கோயில்பாடி
பாச வினையைப் பறித்து நின்று
பாடிப்பொற் சுண்ண மிடித்து நாமே. 5

உலக்கை பலவோச்சு வார்பெரியர்
உலகமெ லாம் உரல்போ தாதென்றே
கலக்க அடியவர் வந்து நின்றார்
காண உலகங்கள் போதா தென்றே
நலக்க அடியோமை ஆண்டு கொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத் தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்து பொற் சுண்ண மிடித்து நாமே. 6

சூழுகந் தோளவளை ஆர்ப்ப வார்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப வார்ப்ப
நாடவர் நம்தம்மை ஆர்ப்ப வார்ப்ப
நாமுமவர் தம்மை ஆர்ப்ப வார்ப்ப
பாடக மெல்லடி யார்க்கும் மங்கை
பங்கின னெங்கள் பராபரனுக்
காடக மாமலை யன்ன கோவுக்
காடப் பொற் சுண்ண மிடித்து நாமே. 7

வாள்தடங் கண்மட மங்கை நல்வீர்
வரிகளை ஆர்ப்ப வண் கொங்கை பொங்க
தோள்திரு முண்டகந் துதைந் திலங்க
சோத்தெம் பிரானென்று சொல்லிச் சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங் காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மை யிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப் பாடி
ஆடப்பொற் சுண்ண மிடித்து நாமே. 8

வையக மெல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறைய அட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப் பாடி
செம்பொன் உலக்கை வலக்கை பற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்து நாமே. 9

முத்தணி கொங்கை ஆட ஆட
மொய்குழல் வண்டினம் ஆட ஆட
சித்தம் சிவனொடும் ஆட ஆட
செங்கயற் கண்பனி ஆட ஆட
பித்தெம் பிரானொடும் ஆட ஆட
பிறவி பிறரொடும் ஆட ஆட
அத்தன் கருணை யோ டாட ஆட
ஆடப்பொற் சுண்ணம் மிடித்து நாமே. 10

மாடு நாகைவான் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவளந் துடிப்ப
பாடுமின் நம்தம்மை ஆண்ட வாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத் தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத் தாடி னானுக்
காடப் பொற் சுண்ண மிடித்து நாமே. 11



மையமர் கண்டனை வான நாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் தன்னை
ஐயனை ஐயர் பிரானை நம்மை
அகப்படுத் தாட்கொண் டருமை காட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணினை பொற்கொடித் தோட்
பையர வல்குல் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ண மிடித்து நாமே. 12

மின்னிடைச் செந்துவர் வாய்க் கருங்கண்
வெண்நகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடைய யாரமு தெங்க ளப்பன்
எம்பெரு மானிம வான் மகட்கு
தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன்
தமைய னெம்ஐம் மையன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்
பொற்றிருச் சுண்ண மிடித்து நாமே. 13

சங்க மரற்றச் சிலம் பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலை யாடச்
செங்கனி வாயித ழுந்துடிப்பச்
சேயிழையீர் சிவலோகம் பாடி
கங்கை இரைப்ப அராவிரைக்கும்
கற்றைச் சடைமுடி யான் கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ண மிடித்து நாமே. 14

ஞானக் கரும்பின் தெளிவைப் பாகை
நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானை
சித்தம் புகுந்து தித்திக்க வல்ல

கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்ட
கூத்தனை நாத்தழும் பேற வாழ்த்தி
பானற் தடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ண மிடித்து நாமே. 15

ஆவகை நாம்வந் தன்பர் தம்மோ
டாட்செய்யும் வண்ணங்கள் பாடி விண்மேல்
தேவர்க னாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவகம் ஏந்திய வெல் கொடியான்
சிவபெருமான் புரம் செற்ற கொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப் பாடிச்
செம்பொன் செய்சுண்ண மிடித்து நாமே. 16

தேனக மாமராக் கொன்றை பாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப்பிள்ளை பாடி
மால்விடை பாடி வலக்கை யேந்து
மூனக மான்மழுச் சூலம் பாடி
உம்பரும் இம்பரும் உய்ய அன்று
போனக மாக நஞ்சுண்டல் பாடி
பொற்றிருச் சுண்ண மிடித்து நாமே. 17

அயன்தலை கொண்டு செண் டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல் பாடிக்
கயன்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடி
காலனைக் காலால் உதைத்தல் பாடி

இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டு கொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடி யாடி
நாதற்குச் சுண்ண மிடித்து நாமே. 18



வட்ட மலர்க் கொன்றை மாலை பாடி
மத்தமும் பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழுந் தென்தில்லை பாடி
சிற்றம்பலத் தெங்கள் செல்வம் பாடி
கட்டிய மாகணக் கச்சை பாடி
கங்கணம் பாடிக் கலித்த கைம்மேல்
இட்டுநின் றாடு மாரவம் பாடி
ஈசற்குச் சுண்ண மிடித்து நாமே. 19

வேதமும் வேள்வியும் ஆயினர்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினர்க்கு
சோதியு மாயிரு ளாயி னார்க்கு
துன்பமு மாயின்ப மாயி னார்க்கு
பாதியு மாய முற்று மாயினார்க்கு
பந்தமு மாய் வீடுமாயி னார்க்குக்
ஆதியுட னந்தமு மாயி னாருக்
காடப் பொற் சுண்ண மிடித்து நாமே. 20

## உலகம் உங்களை விரும்ப

- ☆ பிழைத்தாலும், பிழைக்காவிட்டாலும் புன்னகை உதிர்க்கத் தவறாதீர்கள்.
- ☆ முடிந்தாலும், முடியாவிட்டாலும் உதவமாட்டேன் என்று சொல்லாதீர்கள்.
- ☆ விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் வாய் நிறைய எவரையும் வரவேற்றுவிடுங்கள்.
- ☆ அரைகுறை நண்பரானாலும், அப்போதுதான் அறிமுகமாகி இருந்தாலும் பண்பாகப் பேசிக்கொள்ளுங்கள்.
- ☆ ஏற்றுக்கொள்ள முடியாத கருத்தாக இருந்தாலும் எதிர்வாதம் செய்யாதீர்கள்.

உ





# இதயம் கனிந்த நன்றிகள்


எமது குடும்பத்தலைவர் நோயுற்றிருந்த போது
சிகிச்சையளித்த வைத்தியர்களுக்கும், எமது
குடும்பத்தலைவரின் மறைவுகேட்டு
உடன் வந்து பலவகை உதவிகள் புரிந்து,
ஈமக்கிரியையில் கலந்து கொண்ட
உற்றார் உறவினர் நண்பர்களுக்கும்,
அனுதாபச் செய்திகளை தொலைநகல்,
தொலைபேசி, தந்தி, முதலிய இன்னோரன்ன பல
வழிகளில் அனுப்பியோருக்கும்,
எமது அழைப்பை ஏற்று இன்று நிகழும்
ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளில் கலந்து
சிறப்பித்த அனைவருக்கும் மற்றும்
இம்மலரினை அழகுற அச்சிட்டுத்தந்த றூபன்
அச்சகத்தினருக்கும் எமது உளம் கனிந்த
நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இங்ஙனம்**
குடும்பத்தினர்.



றூபன் பிறிண்டேர்ஸ். ஆனைக்கோட்டை சந்தி. *T.P 0776 624386*

# வம்சாவழி – காசிப கோத்திரம்





# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கின்றதோ அது நன்றாகவே நடக்கின்றது
எது நடக்க இருக்கின்றதோ அதுவும்
நன்றாக நடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக அழுகின்றாய்?
எதை நீ கொண்டு வந்தாய்
அதை நீ இழப்பதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டுள்ளது
எது இன்று உன்னுடையதோ அது
நாளை மற்றொருவருடையாதாகின்றது
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

–பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்–

சந்தி, 0776624386